பக்கங்கள்: 07
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 22 வியாழக்கிழமை 06.01.2022 கதிர் 290

### 11,380 சுற்றுலாப் பயணிகள் 4 நாள்களில் இலங்கைக்கு

இந்த வருடத்தில் கடந்த 4 நாள்களில் மாத்திரம் 11 ஆயிரத்து 380 சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர்.

இவர்களில் அதிகமானோர் ரஷ்யாவில் இருந்து இலங்கை வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இந்தியா, யுக்ரேன், ஜேர்மனி, மாலைதீவு, இங்கிலாந்து, கஸகஸ்தான், ஆஸ்திரேலியா மற்றும் போலந்து போன்ற நாடுகளில் இருந்தும் பல சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஆவணத்தில் தமிழ்க் கட்சிகள் ஒப்பம் மலையக, முஸ்லிம் கட்சிகள் இல்லை

## சம்பந்தன் தலைமையில் தமிழ்த் தலைவர்கள் விரைவில் இந்தியத் தூதுவரிடம் ஒப்படைப்பர்

**இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியிடம் ஒப்படைப்பதற்காகத் தமிழ் பேசும் தரப்புக்களின் பொது நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கும் ஆவணம் ஒன்றில் வடக்கு, கிழக்கு தமிழர்களின் கட்சிகள் இன்று ஒப்பமிட்டன.**

2

## 'மொட்டு' அமைச்சரவையில் பாரிய மறுசீரமைப்புக்குக் கோட்டா திட்டம்

### 60 வீத மாற்றம் இடம்பெறலாம் எனத் தெரிவிப்பு



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிதலைமையிலான அரசின் அமைச்சரவையில் பாரிய மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளார் என்று சிங்கள இணைய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதன்படி அமைச்சரவையில் 60 வீதமான மாற்றங்கள் 2

## 'மொட்டு' கூட்டு அரசிலிருந்து வெளியேறுவாரா மைத்திரி?

அரசுக்குள் ஒழுக்கமாக இருக்க முடியாவிட்டால், வெளியேறுவதே நல்லது என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர்கள் பதிலடி கொடுத்துள்ளனர்.

மாத்தளையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சி கூட்டமொன்றில் உரையாற்றிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன, அரசின் செயற்பாடுகளைக் கடுமையாக விமர்சித்தார். இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து சுசில்



பிரேமஜயந்த நீக்கப்பட்டுள்ளமையையும் வன்மையாகக் கண்டித்தார். 2

## பொருளாதாரப் படையணி: உருவாக்கியது சஜித் அணி



பொருளாதாரக் கொள்கைகள் கேந்திர நிலையமொன்றை பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள்சக்தி நிறுவியுள்ளது.

பொருளாதாரத் துறையில் நிபுணத்துவம் பெற்ற நாடாளுமன்றஉறுப்பினர்களானஹர்ஷ டி சில்வா, கபீர் ஹாசீம் மற்றும் எரான் விக்கிரமரத்ன ஆகியோரின் கண்காணிப்பின் கீழ் குறித்த கேந்திர 2

## காஸ் வெடிப்பு சம்பவங்களால் பாதிக்கப்பட்டோருக்கு காப்பீடு

எரிவாயு வெடிப்புச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்கள் காப்புறுதியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் தெசார ஜயசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அனைத்துலிட்ரோஎரிவாயுபாவனையாளர்களுக்கும் ஒரு மில்லியன் ரூபா வரையான காப்புறுதியைப் பெறுக்கொள்ள முடியும்.

பாதிக்கப்பட்டவர்கள் 1311 என்ற இலக்கத்துக்கு அழைப்பதன் மூலம் இந்தக் காப்புறுதியைப் 2

## தூக்கில் தொங்கிய நிலையில் இராணுவச் சிப்பாயின் சடலம்!

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

திருமுறுகண்டி, ஏ - 9 வீதி பகுதியில் அமைந்துள்ள 11ஆவது இயந்திர காலால் படைப்பிரிவின் பணியாற்றும் இராணுவச் சிப்பாயே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இராணுவப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சடலம் கிளிநொச்சி மாவட்ட பொது 2

### யாழ். போதனா வைத்தியசாலைக்கு

## சிகிச்சைக்காக வந்த பாட்டியின் மூன்று பவுண் நகை கொள்ளை

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற வந்த வயோதிபப் பெண்ணின் 3 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன என்று பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வரும் குறித்த வயோதிபப் பெண் இன்று சிகிச்சையின் நிமித்தம், 'எக்ஸ்ரே' எடுப்பதற்காகச் சென்றபோது, தான் அணிந்திருந்த தங்கச் சங்கிலி மற்றும் காப்பு ஆகியவற்றைக் கழட்டி தனது கைப்பையினுள் (ஹாண்ட் பாக்) வைத்துச் சென்றுள்ளார்.


திரும்பி வந்து கைப்பையைப் பார்த்த போது, அதனுள் இருந்த நகைகள் களவாடப்பட்டு இருந்தமையைக் கண்ணுற்று வைத்தியசாலை நிர்வாகத்திடம் முறையிட்டுள்ளார். 2

## இலங்கையுடனான சீனாவின் உறவு இவ்வருடம் மேலும் பலப்படுத்தப்படும்

### சபாநாயகரிடம் தூதுவர் வாக்குறுதி

இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ சென்ஹொங், சபாநாயகர் மஹிந்தயாப்பாஅபேவர்த்தனவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

அத்துடன், சீன மக்கள் குடியரசின் தேசிய மக்கள் காங்கிரஸின் நிலைக் குழுவின் தலைவரின் (சீன நாடாளுமன்ற சபாநாயகர்) புத்தாண்டு வாழ்த்துச் செய்தியையும் சபாநாயகரிடம் கையளித்தார். 2



## ஆவணத்தில் தமிழ்க் கட்சிகள் ஒப்பம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 21ஆம் திகதி இறுதி செய்யப்பட்ட ஆவணத்தில் சம்பந்தன் உட்பட பல தலைவர்களும் இன்று ஒப்பமிட்டனர்.

அது விரைவில் இந்தியத் தூதுவர் ஊடாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பி வைக்கப்பட்டவுள்ளது.

அந்த ஆவணத்தில் இரா.சம்பந்தன். நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன், சுரேஷ் பிறேமச்சந்திரன், என்.ஸ்ரீகாந்தா, செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன் ஆகியோர் இன்று ஒப்பமிட்டனர். மாவை சேனாதிராஜா எந்த நேரத்திலும் அந்த ஆவணத்தில் ஒப்பமிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

தமிழ் முற்போக்கு முன்னணியின் தலைவர் மனோ கணேசன் இன்று கூட்டமைப்புத் தலைவர் இரா சம்பந்தனை அவரது இல்லத்தில் சந்தித்தார். அவரது தரப்பினதும், முஸ்லிம்கள் தரப்பினதும், பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு அவர்களின் பங்களிப்பு இல்லாமலஏயே பொது ஆவணத்தை பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பும் முடிவை இந்தச் சந்திப்பின்போது மனோகணேசனுடன் நேரிலும், ரவூப் ஹக்கீமுடன் தொலைபேசியிலும், பேசி சம்பந்தன் எடுத்தார்.

கடந்த 21 ஆம் திகதி குளோபல் டவர் ஹோட்டலில் நடைபெற்ற தமிழர் தரப்புக் கட்சிகளின் ஆலோசனைக் கூட்டத்தில் இறுதி செய்யப்பட்ட கடிதமே இப்போது தமிழ்க் கட்சிகளின் தலைவர்களால் ஒப்பமிடப்பட்டு இந்தியப் பிரதமருக்கு அனுப்பப்படுகின்றது.

சம்பந்தன் தலைமையிலான தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் இந்தியத் தூதுவரைச் சந்தித்து இக்கடிதத்தை அவர் மூலம் இந்தியப் பிரதமருக்கு அனுப்பி வைப்பர் எனத் தெரிகிறது.

## 'மொட்டு' அமைச்ச ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெறக்கூடும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமைச்சுகளின் விடயதானங்கள் கைமாற்றப்படவுள்ளன. புதிதாக எவரும் அமைச்சரவைக்குள் உள்வாங்கப்பட மாட்டார்கள்.

அத்துடன், சுசில் பிரேமஜயந்தவின் பதவி நீக்கத்தின் பின்னர் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு புதிய இராஜாங்க அமைச்சர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார்.

## பொருளாதாரப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையம் இயங்கவுள்ளது.

நாடு கடும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துள்ள நிலையில், நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை இந்தக் குழு முன்வைக்கவுள்ளது.

## 'மொட்டு' கூட்டு ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று அநுராதபுரத்தில் நடைபெற்ற கூட்டமொன்றிலும் அரசு மீது அவர் கடும் விமர்சனங்களை முன்வைத்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே 'மொட்டு' கட்சி உறுப்பினர்கள் மைத்திரிக்குப் பதிலடி கொடுக்க ஆரம்பித்துள்ளனர். அவரை அரசில் இருந்து வெளியேற்ற வேண்டும் எனவும் வலியுறுத்தி வருகின்றனர்.

## காஸ் வெடிப்பு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் காப்புறுதித் திட்டத்தின் மூலம் இதுவரையில் மிகவும் குறைந்த எண்ணிக்கையானவர்களே விண்ணப்பித்துப் பயன் பெற்றிருக்கின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தூக்கில் தொங்கிய .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

## சிகிச்சைக்காக வந்த .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிர்வாகத்தின் அறிவுறுத்தலுக்கமைய வைத்தியசாலைப் பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்கு வருவோர் நகைகள் உள்ளிட்ட பெறுமதியான பொருள்களைக் கொண்டு வருவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு , வைத்தியசாலை நிர்வாகம் பல தடவைகள் எச்சரித்து வந்துள்ளது.

தினமும் வைத்தியசாலைக்குப் பெருமளவானோர் பல்வேறு பகுதிகளில் இருந்து வருவதால் சிகிச்சைக்கு வருவோர் தமது உடமைகளை தாமே பாதுகாத்துக்கொள்ள வேண்டிய தேவையுள்ளது. அதனால் பெறுமதியான உடமைகளுடன்வருவதைத்தவிர்த்துக்கொள்ளுமாறு வைத்தியசாலை நிர்வாகம் கோரியுள்ளது.

## இலங்கையுடனான .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் காணப்படும் இரு தரப்பு ஒத்துழைப்பை இவ்வருடத்தில் மேலும் பலப்படுத்துவதற்கு உறுதியுடன் இருப்பதாக சீனத் தூதுவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

வாழ்த்துச் செய்தியை அனுப்பிவைத்தமைக்காக சீன மக்கள் குடியரசின் தேசிய மக்கள் காங்கிரஸின் நிலைக் குழுவின் தலைவருக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நன்றி தெரிவித்தார்.

இலங்கைக்குச் சீனா தொடர்ந்தும் வழங்கி வரும் ஒத்துழைப்புக்கு சபாநாயகர் இங்கு நன்றி பாராட்டினார்.


## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



## Walk-In Interview
## Front Office Executive



We are looking for a female Front Office Executive for immediate employment

The ideal candidate must have;
# Poses G.C.E. (A/L) qualification.
# An IT Literate.
# Strong interpersonal and communication skills.
# Excellent English communication skills.
# Excellent telephone etiquettes and knowledge.
# Hands-on experience in Front-Desk operations.
# Certificate/Diploma in Business Administration or similar field will be an added advantage.

Sunday, 09/01/2022
10:00 - 13:00

IIS CITY CAMPUS

441 Clock Tower Road, Jaffna
0212228060 / 0717774666

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கூட்டுப் பொறுப்பு எங்கே?

நாட்டில் பொருளாதார நெருக்கடி என்றால், அரசுக்குள் அரசியல் நெருக்கடி.

முன்பின் அரசியலில் இல்லாத – அரசியலிலேயே ஈடுபட்டிராத – ஒருவரின் கையில் நாட்டின் தலைமைப் பதவியையும், நிறைவேற்று அதிகாரத்தையும் ஒப்படைத்த அரசியல் தலைவர்கள், ‘அணில் ஏற விட்ட நாய் போல’ கீழே நின்று கையைப் பிசைந்து கொண்ட நிற்கின்றனர்.

அவரோ முன்னால் இராணுவ அதிகாரி. பின்னரும் ஆற்றியது பாதுகாப்புச் செயலாளர் பதவிதான். அதுவும் யுத்த சூழலில்.

அதே இராணுவப் பாணியைத்தான் நாட்டின் நிர்வாகத்தில் அவர் பின்பற்ற முனைகின்றார். அங்கு ஆட்சி அதிகாரம், அரசியல், மக்கள் தொடர்பாடல் போன்றவற்றை எல்லாம் வேறுபடுத்திப் பார்க்கும் தகைமை – தகுதி நிலை – அவரிடம் இல்லை. சிவில் நிர்வாகம் வேறு, இராணுவ அல்லது படை நிர்வாகம் வேறு என்பதைப் புரிந்துகொள்ளும் மனநிலையில் அவர் இல்லை.

அதனால், அவரை ஆட்சிப் பீடத்துக்குக் கொண்டு வர முண்டியடித்தவர்கள் – அவரை முன்நிறுத்தி தமது அரசியலைத் தொடர்ந்தவர்கள் – எல்லோரும் என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறுகின்றனர்.

இரண்டு வருடத்துக்குள் நாடு பெரும் குழப்பத்துக்குள். மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையோடு அதிகாரத்துக்கு வந்த அரசு, வந்த கையோடு செய்த முதல் வேலை நிறைவேற்றதிகார ஜனாதிபதிக்கு மேலும் அதிகாரங்களைக் கொட்டிக் கொடுத்து, அவரின் எதேச்சதிகாரப் போக்கை மேலும் வலிமைப்படுத்தியதுதான்.

அதன் விளைவுகளை எதிர்கொள்ள முடியாமல் அவரை அதிகாரத்துக்குக் கொண்டு வந்தோரே இன்று தடுமாறிப்போய் நிற்கின்றனர்.

ஒரு ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவதற்கு சுமார் இரண்டு மாத காலத்துக்கு முன்னரே அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதைத் கணக்கில் எடுத்துப் பார்த்தாலும், அடுத்து இரண்டரை ஆண்டு காலத்துக்கு இவர்தான் ஜனாதிபதி. அதை சகித்துக் கொள்வதைத் தவிர, அவரை ஆட்சிப் பீடத்துக்கு கொண்டு வந்தவர்களுக்கும் கூட வேறு வழியில்லை.

அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்புக்கு எதிராக, கூட்டுச் சேர்ந்து பொது எதிர்ப்பணியை உருவாக்கி, அத. பற்றி பிரசாரங்களை ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் முன்னெடுத்து, நீதிமன்றத்திலும் சத்தியப் பிரமாண ஆவணங்கள் மூலம் அமைச்சரவைக்கு மாறாகக் கிளர்ந்துள்ளமையை உறுதிப்படுத்தி நிற்கும் மூன்று அமைச்சர்கள் விடயத்தில் ஏதும் செய்யத் திராணியற்ற இந்த ஜனாதிபதி, சந்தையில், சந்தை விலைகள் குறித்துக் கேட்கப்பட்ட கேள்விக்கு உண்மையான கள நிலைவரத்தைப் பதிலாகக் கூறிய இராஜாங்க அமைச்சரைப் பதவியிலிருந்து தூக்கியிருக்கின்றார். அதுவும் ஆளும் தரப்பில் சிரேஷ்ட நிலையில் இருக்கும் – சக அரசியல் தலைவர்களினாலும், பொது மக்களாலும் பெரிதும் மதிக்கப்படும் – ஒரு மூத்த அரசியல் தலைவரை கேட்டுக் கேள்வியின்றி தூக்கிக் கடாசும் ஜனாதிபதி, அமைச்சரவைக் கூட்டுப் பொறுப்பை மிக பகிரங்கமாக சவால் விடும் விதத்தில் மீறி நடக்கும் மூன்று அமைச்சர்கள் விடயத்தில் பம்மிக்கொண்டு நிற்கிறார்.

ஆளும் அரசுத் தரப்பின் கூட்டுப் பொறுப்பை விட, அமைச்சரவைக் கூட்டுப்பொறுப்புத்தான் மிகப் பிரதானமானது; முக்கியமானது. அதை விளங்காதவரா ஜனாதிபதிப் பதவியில் இருக்கின்றார்?

# கொரோனா கட்டுப்பாட்டில் உள்ளபோதும் சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிக்கவும்

## ஜாசிங்க வலியுறுத்து



கொரோனா வைரஸ் தற்போது நாட்டில் கட்டுப்பாட்டில் உள்ளபோதும் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட அனைத்து சுகாதார நடவடிக்கைகளும் தொடர வேண்டும் என சுற்றுச்சூழல் அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

சுற்றாடல் அமைச்சில் நடைபெற்ற கொரோனாப் பரவலைத் தடுப்பதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து விளக்கமளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொரோனா தடுப்புக்காக சுகாதார அதிகாரி ஒருவரின் சேவையைப் பெறுமாறு ஒவ்வொரு நிறுவனத்திற்கும் அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது என அவர் கூறினார்.

நியூயோர்க் நகரில் நோயாளிகள் இன்னும் பதிவாகி வருகின்றனர் எனத் தெரிவித்த அவர், இங்கிலாந்தில் தினமும் சுமார் ஒரு லட்சம் நோயாளிகள் பதிவாகுகின்றனர் எனத் தெரிவித்தார்.

இலங்கையும் கடந்த காலங்களில் கொரோனா வைரஸ் காரணமாக நிறைய சிரமங்களை எதிர்கொண்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேசமயம், ஒமிக்ரோன் வைரஸ் இந்த நாள்களில் உலகம் முழுவதும் பரவி வருகிறதென்றும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறிருப்பினும் இலங்கையில் கொரோனாத் தொற்று ஓரளவு கட்டுப்பாட்டிற்குள் உள்ளதாகத் தெரிவித்த அவர், குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நோயாளிகள் பதிவாகியிருந்தாலும் இறப்பு வீதம் குறைந்து வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

எனவே, தனிப்பட்ட இடைவெளியைக் கடைபிடிக்க வேண்டும் என்பதோடு, முகக் கவசங்களை அணிவது மற்றும் கைகளைச் சுத்தம் செய்வது ஆகியவை கொரோனா வைரஸின் பரவலைக் கட்டுப்படுத்த ஒரு தந்திரமாகப் பயன்படுத்தப்பட வேண்டும் எனவும் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

# அரிசி விலை சடுதியாக எகிறல் தட்டுப்பாடும் ஏற்பட வாய்ப்பு!

சந்தையில் அரிசியின் விலை மீண்டும் சடுதியாக அதிகரித்துள்ளதாக அரிசி உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, நாட்டரிசி ஒரு கிலோகிராம் 170 ரூபா வரையிலும் சம்பா அரிசி ஒரு கிலோகிராம் 190 ரூபா வரையிலும் அதிகரித்துள்ளதாக அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், எதிர்காலத்தில் சந்தையில் அரிசி தட்டுப்பாடு ஏற்படக்கூடும் எனவும் அந்த சங்கத்தின் தலைவர் முதித்த பெரேரா தெரிவித்துள்ளார்.

வழமையாக ஜனவரி மாதத்தில் ஆண்டுக்கான பெரும்போக அரிசி சந்தைக்கு கிடைக்கும் என்றும் ஆனால், உரப் பிரச்சினை காரணமாக இந்த முறை போதியளவான அரிசி சந்தைக்கு கிடைக்கப்பெறவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சுசில் பிரேமஜயந்தவின் எம்.பி. பதவியும் பறிக்கப்படுகின்றது?

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிற்கு எதிராக மேற்கொள்ளப்படும் எதிர்கால நடவடிக்கை தொடர்பாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் பீட கூட்டத்தின் போது தீர்மானிக்கப்படவுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறிப்பாக சுசில் பிரேமஜயந்தவிற்கு எதிராக எடுக்கப்படவுள்ள ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பாக அரசியல் பீட கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் எனக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், அரசியல் பீட கூட்டத்தின் திகதி இதுவரை தீர்மானிக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவரது கட்சி உறுப்புரிமை இரத்து செய்யப்பட்டால், அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியும் பறிக்கப்படும் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இராஜாங்க அமைச்சர் பதவியை இழந்த சுசில் பிரேமஜயந்த, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மோடிக்கான ஆவணத்தில் ஒப்பமிடுவதா? முடிவு தொடர்பில் ஆராயும் மனோ அணி



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்புவதற்காகத் தமிழ் பேசும் கட்சிகளின் சார்பில் தயாரிக்கப்படும் பொது ஆவணம் தொடர்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணி இன்று வியாழக்கிழமை இறுதி முடிவை எடுக்கவுள்ளது.

இதற்காக அக்கூட்டணியின் அரசியல் குழு இன்று அவசரமாகக் கூட்டப்படவுள்ளது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைமைக்குழு கூட்டம் ‘ஒன்லைன்’ மூலம் நேற்று நடைபெற்றது.

கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர்களான பழனி திகாம்பரம், வே. இராதாகிருஷ்ணன் ஆகியோர் உட்பட தலைமைக்குழு உறுப்பினர்கள் இதில் பங்கேற்றனர்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் என அறியப்படும், இலங்கை அரசமைப்பில் இடம் பெற்றுள்ள ஒரேயொரு அதிகாரப் பரவலாக்கல் சட்டத்தை முழுமையாக அமுலாக்க உரிய அறிவுறுத்தல்களை, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிரதான தரப்பு என்ற முறையில், இலங்கை அரசுக்குக் கொடுங்கள் என்ற கோரிக்கையை முன்வைத்து பாரதப் பிரதமர் நரேந்திர மோடிக்கு, தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகள் சார்பாக எழுதப்படவுள்ள பொது ஆவணம் தொடர்பில் நேற்று கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

நவம்பர் 2ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ‘திண்ணைக் கலந்துரையாடல்’ முதல் கடந்த ஒரு மாதமாக நடைபெற்ற கலந்துரையாடல்களில் முன்வைக்கப்பட்ட பல்வேறு வரைவுகளின் உள்ளடக்கங்கள் தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டுள்ளன.

# 3000 லிற்றர் மதுபானத்தை கால்வாயில் கொட்டி வீடியோ வெளியிட்ட தலிபான்கள்



3000 லிற்றர் மதுபானத்தை கால்வாயில் கொட்டி அந்த வீடியோவை அதிகாரபூர்வமாக வெளியிட்டுள்ளனர் தலிபான்கள்.

ஆப்கானிஸ்தானிலிருந்து கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் அமெரிக்க, நேட்டோ படைகள் வெளியேறின. இதனையடுத்து அங்கு ஆட்சியைக் கைப்பற்றியது தலிபான் அமைப்பு. தலிபான்கள் ஆட்சியில் பல்வேறு கெடுபிடிகளும் விதிக்கப்பட்டுள்ளன.

இஸ்லாமியா ாரியா சட்டத்தின்படியே ஆட்சி நடக்கும் என அவர்கள் ஏற்கெனவே அறிவித்துள்ளனர்.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானின் உளவுத்துறை இயக்குநராக சார்பில் ஒரு ருவீட் வெளியிடப்பட்டுள்ளது. அந்த ட்வீட்டில் இடம்பெற்றுள்ள வீடியோவில் பெரிய பீப்பாய்களில் இருந்து மதுபானம் கால்வாயில் கொட்டப்படும் காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

அத்துடன் முஸ்லிம்கள் மதுபானத்தை தயாரிக்க, விற்க, அருந்தக் கூடாது எனப் பதிவிடப்பட்டிருந்தது. இந்த ரெய்டு எப்போது நடத்தப்பட்டது என்பது குறித்த தகவல் ஏதும் தெரிவிக்கப்படவில்லை.

ஆப்கானிஸ்தானில் இதற்கு முன்னதாக இருந்த ஆட்சியின்போதும் மதுபானங்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

தலிபான்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் நாடு முழுவதும் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. மேலும், போதைப் பழக்கம் உடையவர்களைக் கைது செய்து சிறையில் அடைக்கும் நடவடிக்கையும் அதிகரித்துள்ளது

# எரிபொருள் விலை உயர்வுக்கு எதிராக கஜகஸ்தானில் பாரிய போராட்டம்

## அவசர நிலை பிரகடனம்

எரிபொருள் விலை உயர்வுக்கு எதிரான மக்களின் போராட்டங்கள் வன்முறையாக மாறியுள்ள நிலையில் நாட்டின் சில பகுதிகளில் இரண்டு வார கால அவசர நிலை கஜகஸ்தானில் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. நாடு முழுவதிலும் பல பகுதிகளில் பெரும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் மிகப் பெரிய நகரமான அல்மாட்டியில் வாகனங்கள் தீவைக்கப்பட்டதைத் தொடர்ந்து, கூட்டத்தைக் கட்டுப்படுத்த பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதேவேளை நாட்டில் நிலவும் அமைதியின்மைக்கு மத்தியில் அரசாங்கத்தின் இராஜினாமாவை அவர் ஏற்றுக்கொண்டபார் என அந்நாட்டு ஜனாதிபதி கூறியுள்ளார்.

மேலும் பிரதமராக இடைக் கால அடிப்படையில் நாட்டின் துணைப் பிரதமரான அலிகான் ஸ்மைலோவை நியமித்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அரசாங்க அலுவலகங்கள் மீதான தாக்குதல்கள் முற்றிலும் சட்டவிரோதமானவை என அந்நட்டு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.



# வெடிபொருள்களுடன் பாக்தாத் வந்த ஆளில்லா விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன!



ஈராக் தலைநகர் பக்தாத் விமான நிலையத்தை நோக்கி வெடிபொருட்களை நிரப்பியவாறு பறந்துவந்த இரண்டு ஆளில்லா சிறிய ரகவிமானங்கள் நேற்று சுட்டுவீழ்த்தப்பட்டன.

ஈராக் இராணுவத்தினருக்கு ஆலோசனை வழங்குவதற்காக தலைநகா பக்தாத்தில் முகாமிட்டுள்ள அமெரிக்க படையினரை இலக்குவைத்து தாக்குதல் நடத்தும் நோக்குடன் இந்த ஆளில்லா விமானங்கள் ஏவப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப் பட்டுள்ளது.

கடந்த 2020-ஆம் ஆண்டு அமெரிக்கா நடத்திய ட்ரோன் தாக்குதலில் ஈரான் இராணுவத் தளபதி காசிம் சுலைமானி படுகொலை செய்யப்பட்டார்.

இந்நிலையில் இந்தத் தாக்குதலுக்கு பழிதீர்க்கும் வகையில் ட்ரோன் தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

வெடிமருந்து நிரப்பிய இந்த ட்ரோன்களை அனுப்பியது யார்? எனத் தெரியாதபோதும் வீழ்த்தப்பட்ட ட்ரோன்களின் இறக்கைகளில் சுலைமானி கொலைக்கு பழிதீர்ப்பு போன்ற வார்த்தைகள் இடம்பெற்றிருந்தன என அதிகாரிகள் தெரிவித்தனா.

ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிரான ஈராக்கின் போராட்டத்துக்கு ஆதரவு அளித்து வந்த அமெரிக்கா, கடந்த மாதத்துடன் அந்த ஆதரவை நிறுத்திக் கொண்டது. எனினும், 2,500இற்கும் மேற்பட்ட அமெரிக்க இராணுவத்தினர் ஈராக் இராணுவத்தினருக்கு ஆலோசனை வழங்குவதற்காக தலைநகா பக்தாத்தில் முகாமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# அணு ஆயுதப் போர் கூடாது: 5 நாடுகள் கூட்டு அறிக்கை

அணு ஆயுதப் போரில் ஒருபோதும் ஈடுபடக் கூடாது என்று அமெரிக்கா, சீனா, பிரான்ஸ், ரஷ்யா, பிரிட்டன் ஆகிய 5 நாடுகள் கூட்டறிக்கை வெளியிட்டன. இதுதொடாபாக அந்த கூட்டறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு :-

அமெரிக்கா, சீனா, பிரான்ஸ், ரஷ்யா, பிரிட்டன் ஆகிய நாடுகள் இடையிலும், பிற நாடுகள் மீதும் அணு ஆயுதங்களை பயன் படுத்தக்கூடாது என்பது தலையாய கடமையாகக் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தைப் பின்பற்றுவதில் உறுதியாக உள்ளோம்.

அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவது பரந்த அளவில் பின் விளைவுகளை ஏற்படுத்தும். எனவே, அந்த ஆயுதங்கள் இருக்கும் வரை, அவற்றை தற்காப்புக்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும். அந்த ஆயுதங்கள் மென்மேலும் உருவாக்கப்படுவதைத் தடுக்க வேண்டும்.

அணு ஆயுத அச்சுறுத்தலை கவனத்தில் கொள்வது, அணு ஆயுதப் பரவலைத் தடுப்பது, ஆயுதங்கள் இருப்பை குறைப்பது தொடாபாக இருதரப்பு, முத்தரப்பு ஒப்பந்தங்களை 5 நாடுகளும் பின்பற்றும்.

அணு ஆயுதப் போரில் வெற்றிபெற முடியாது. அந்தப் போரில் ஒருபோதும் ஈடுபடக் கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, சீனா, பிரான்ஸ், ரஷியா, பிரிட்டன் ஆகிய நாடுகள் ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலில் நிரந்தர உறுப்பு நாடுகளாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.



## குடியரசு தலைவர் – பிரதமர் மோடி சந்திப்பு

குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்துடன், பிரதமர் நரேந்திர மோடி சந்தித்து உரையாடியுள்ளார்.

பஞ்சாப் மாநிலத்தில் நேற்று பிரதமர் தடுத்து நிறுத்தப்பட்ட நிலையில், இன்று ஜனாதிபதியுடன் சந்தித்து அது தொடர்பாக உரையாடினார். பஞ்சாப் மாநிலத்தில் சாலை மறியலால் பிரதமர் நேற்று தடுத்து நிறுத்தப்பட்டமை தொடர்பாக ஜனாதிபதி கவலை வெளியிட்டிருந்தார்.

பிரதமரின் பாதுகாப்பை சரிவர மேற்கொள்ளாத பஞ்சாப் அரசுக்கு பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்துவரும் நிலையில் பஞ்சாப் விவகாரம் தொடர்பாக குடியரசுத் தலைவரை சந்தித்து, பிரதமர் நரேந்திர மோடி விளக்கம் கோரினார் எனத் தகவல் வெளியகியுள்ளன.

## நீட் தொடர்பாக அனைத்துக் கட்சிகள் கூட்டம் பேரவையில் முதலமைச்சர் ஸ்டாலின் அழைப்பு

தமிழகத்துக்கு நீட் தேர்வில் இருந்து விலக்கு கோருவது தொடர்பாக நாளை மறுநாள் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெறும் என்றும், அதில் எடுக்கப்படும் முடிவின் அடிப்படையில் நீட் தேர்வுக்கு எதிரான தமிழக அரசின் போராட்டம் தொடரும் என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.நீட் தொடர்பாக 110 விதியின் கீழ் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பை வெளியிட்டார். தமிழ்நாட்டில் முதலில் 12ஆம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் மருத்துவ மாணவர் சேர்க்கை நடைபெற்றபோது, ஊர்ப்புற மாணவர்களும், ஏழை எளிய மாணவர்களும் மருத்துவப் படிப்பில் சேர்ந்து பயனடைந்ததனர் எனக் குறிப்பிட்டார். மருத்துவப் படிப்புக்கு நீட் தேர்வை மத்திய அரசு கொண்டுவந்ததால் கிராமப்புற, ஏழை, எளிய மாணவர்கள் மருத்துவம் படிக்கும் வாய்ப்பு பாதிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.மருத்துவப் படிப்புக்கான நீட் தேர்வு மட்டுமின்றி, எந்தவொரு நுழைவுத்தேர்வாக இருந்தாலும், ஏழை எளிய மாணவர்களின் உயர்கல்விக் கனவைப் பாதிக்கும் எனத் தெரிவித்தார். நீட் தேர்வில் இருந்து தமிழகத் துக்கு விலக்கு அளிக்கக் கோரிச் சட்டப்பேரவையில் ஏகமனதாகத் தீர்மானம் இயற்றப்பட்டதையும், அந்த மசோதா மீது ஆளுநர் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு தலைமையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குடியரசுத் தலைவரைச் சந்தித்து நீட் தேர்வால் ஏற்படும் பாதிப்புக் குறித்து மனு அளித்தமையையும் குறிப்பிட்டார். நீட் தேர்வுக்கு விலக்கு கோருவது தொடர்பாக நாளை மறுநாள் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற உள்ளதாக அறிவித்த முதலமைச்சர், அதில் பங்கேற்க வேண்டுகோள் விடுத்தார்.

## இத்தாலி - பஞ்சாப் வந்த விமானத்தில் 125 பயணிகளுக்கு கொரோனா உறுதி

இத்தாலியில் இருந்து பஞ்சாப் மாநிலம் அமிர்தசரசுக்கு வந்த விமானத்தில், 125 பயணிகளுக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது.இத்தாலியில் இருந்து வந்த ஏர் இந்தியா விமானத்தில் 170இற்கும் மேற் பட்டோர் பயணித்துள்ளனர் எனவும், அமிர்தசரஸ் விமான நிலையத்தில் நடைபெற்ற கொரோனாப் பரிசோதனையிலேயே 125 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளதாகவும் அறியமுடிகிறது.








# ஈஸ்டர் தாக்குதல் – சஹரானுடன் தொடர்புடைய 60 பேருக்கும் தொடர்ந்தும் விளக்கமறியல் நீடிப்பு



உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட சஹரானின் பயிற்சி முகாமில் பயற்சிபெற்ற மற்றும் அவருடன் தொடர்பைப் பேணி வந்த 60 பேரையும் எதிர்வரும் 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிவான் ஏ.சி.எம்.றிஸ்வான் காணொளி மூலமாக நேற்று புதன்கிழமை உத்தரவிட்டார்.

கடந்த 21.4.2019 உயிர்த்த ஞாயிறன்று இடம் பெற்ற தாக்குதலின் பின்னர்; சஹரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் இவர்கள் அம்பாந்தோட்டை மற்றும் நுவரேலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தில் காத்தான் குடியைச் சேர்ந்த 65 பேரை கைது செய்தனர்.

அதேவேளை சஹரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர், உட்பட 4 பேரை மட்டக்களப்பு பொலிஸார் கைது செய்தனர் இரு வேறு வழக்குகளைக் கொண்ட 69 பேர் தொடர்ந்து விளக்க மறியல் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 5 பேர் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டமையுடன் 2 பேருக்கு எதிராக கொழும்பில் வழக்குதாக்குதல்செய்யப்பட்டதுடன் 2 பேரின் வழக்கு மேல் நீதிமன்றில் தாக்குதல் செய்யப்பட்டுள்ளதையடுத்து 60 பேர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த வேறு இரு வழக்குகளை கொண்ட 60 பேரும் நாட்டிலுள்ள பொலன்னறுவை, அநுதாரபுரம், கேகாலை, திருகோணமலை, போன்ற சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில்வைக்கப்பட்டனர்.

இந்த நிலையில் இன்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிவான் ஏ.சி.எம்.றிஸ்வான் முன்னிலையில் இந்த வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது தற்போது தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு சட்டம் காரணமாக நீதிமன்றிற்கு இவர்களை அழைத்துவர முடியாததையடுத்து அவர்களை காணொளி மூலமாக எதிர்வரும் 19 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறுநீதவான்ஏ.சி.எம்.றிஸ்வான் உத்தரவிட்டார்.

# மட்டக்களப்பில் குளங்கள் நிரம்பி வழிவதால் வீதிக்கு வரும் பெரும் முதலைகளால் அச்சம்



மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வந்த மழை புதன்கிழமை காலையிலிருந்து சற்று குறைவடைந்துதுள்ளது. எனினும் மாவட்டத்திலுள்ள பெரும்பாலான சிறிய குளங்கள் அனைத்தும் நிரம்பி வழிவதையும், பெரியகுளங்கள்நிரம்பியுள்ள நிலையில் அவற்றின் வான் கதவுகளும் திறந்துவிடப்பட்டுள்ளதால் சில வீதிகளை ஊடறுத்து வெள்ள நீர் பாய்கின்றது.

இதனால் மாவட்டத்தின் வெல்லாவெளி, கோவில்போரதீவு, பழுகாமம், பொறுகாமம், பெரியபோரதீவு, கொக்கட்டிச்சோலை, எருவில், களுவாஞ்சிகுடி, குருமண்வெளி, களுதாவளை, தேத்தாத்தீவு, உள்ளிட்ட பல இடங்களிலுள்ள சிறிய குளங்கள் நிரம்பி வழிகின்றன.

குளங்கள் நிரம்பி வழிந்து நேரடியாக மட்டக்களப்பு வாவியைச் சென்றடைவதால் வாவியிலிருந்து முதலைகளும் குளங்களை நேக்கி வருகின்றன. இவ்வாறு வரும் முதலைகள் கிராமங்களுக்குள்ளும் உட்புகும் சாத்தியங்கள் அதிகம் காணப்படுகின்றன என கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.



# தரம் 5 மாதிரிப் பரீட்சை வினாத்தாள் வழங்கல்

மட்டக்களப்பு இராசமாணிக்கம் அமைப்பினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பல்வேறு பாடசாலையில் தரம் 5 இல் கல்வி பயிலும் மாணவர்களின் நலன் கருதி தரம் 5 மாதிரிப் பரீட்சை வினாத்தாள் வழங்கி வைக்கப்பட்டது.

கல்குடா கல்வி வலயத்தில் உள்ள 76 ஆரம்ப பாடசலைகளுக்கும் இவ் பரீட்சை வழிகாட்டி முன்மாதிரி வினாத்தாள்கள் வழங்கி வைக்கபட்டன . இம்மாதம் நடுப் பகுதியில் இந்தப் பரீட்சை நடைபெறவுள்ளமை குறிபிடத்தக்கது. இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கலந்து கொண்டு வினாத்தாள்களை வழங்கி வைத்தார்.

# திருகோணமலை விவசாயிகள் உரம்கோரி வீதியில் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை கப்பல்துறை விளாங்குளம் விவசாயிகள் உரம் கோரி வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

நேற்று திருகோணமலை கண்டி பிரதான வீதி விளாங்குளம் பிரதேசத்தில் இடம்பெற்ற



இந்த ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவும் இணைத்து கொண்டார்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் தமக்கான உரத்தினை உரிய நேரத்தில் வழங்குமாறும்,எரிவாயுவும் இல்லை உரமும் இல்லை, முடியுமென்றால் ஆட்சி செய்யுங்கள் இல்லாவிட்டால் விலகுங்கள் என்ற கோங்களை எழுப்பியவாறு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் இணைந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவர், விவசாயிகளின் விளைச்சல் நிலங்களைப் பார்வையிட்டதுடன் அரசாங்கத்தினால் புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட திரவ உரம் தொடர்பிலும் கேள்வி எழுப்பினார் அதற்கு விவசாயி ஒருவர் அந்த உரம் இடும் நாளில் தனது மனைவியுடன் அணுகுவது கூட இல்லை என கேளிக்கையாகப் பதிலளித்தார்.



# சிலிண்டருக்காக நீண்ட வரிசையில் காத்திருக்கும் மட்டக்களப்பு மக்கள்

சமையல் எரிவாயு சிலிண்டர்களைப் பெற்றுக் கொள்வதற்காக மட்டக்களப்பு காத்தான்குடி மக்கள் நேற்று நீண்ட வரிசையில் காத்து நின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாகப் பொது மக்கள் பலத்த சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர். லிற்றோ சமையல் எரிவாயு மட்டக்களப்பு மாவட்ட ஏக விநியோகஸ்தர்கள் நேற்று காலை கொழும்பிலிருந்து வந்த லிற்றோ சமையல் எரிவாயுவை காத்தான் குடி கடற்கரை வீதியோரமாக வைத்து பொது மக்களுக்கு விநியோகம் செய்தனர்.

சமையல் எரிவாயு தட்டுப்பாட்டினால் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு போதுமானளவு சமையல் எரிவாயு வராததால் இந்த நிலைமை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மடுமாதா வைத்தியசாலைக்கு நேற்று அடிக்கல் நாட்டி வைப்பு!





மன்னார் – தலைமன்னார் பிரதான வீதியில் அமைக்கப்படவுள்ள மடு மாதா வைத்தியசாலைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று (வியாழக்கிழமை) காலை 10 மணி அளவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட மக்களின் நலனை கருத்தில் கொண்டு சகல வசதிகளுடன் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுக்கொள்ளும் வகையில் அமைக்கப்படவுள்ள குறித்த வைத்தியசாலைக்கான அடிக்கல்லை மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை நாட்டி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ. ஸ்ரான்லி டிமெல், மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த. விநோதன், மன்னார் நகர முதல்வர் ஞானப் பிரகாசம் அன்ரனி டேவிட்சன், மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கில்றோய் பீரிஸ் உள்ளடங்களாக மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர், ஆயரின் செயலாளர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் இணைந்து அடிக்கல்லை நாட்டி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு பங்குச்சந்தையின் விலைச்சுட்டெண் அதிகரிப்பு

கொழும்பு பங்குச்சந்தையின் விலைச்சுட்டெண் இன்று மீண்டும் அதிகரித்துள்ளது.

இன்றைய கொடுக்கல் வாங்கல் முடிவின் படி பங்குகளின் விலைச்சுட்டி 13 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

இந்த விலைச்சுட்டி நேற்றைய தினத்திலும் பார்க்க 2.1 வீதம் அதிகரித்துள்ளது.

கொழும்பு பங்குச்சந்தையின் மொத்த பிறழ்வு 15.56 பில்லியனை கடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பசுமை நிறுத்துமிடம் மீள காலி முகத்திடலில் திறப்பு

காலி முகத்திடல் கிரீன் வாகன நிறுத்துமிடம், நேற்று (புதன்கிழமை) முதல் பொது மக்களின் பாவனைக்காக திறக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் தொற்றுநோய்களின்போது முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே வாகன நிறுத்துமிடங்கள் மூடப்பட்டன எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவா தெரிவித்துள்ளார். இந்த நடவடிக்கை எந்த வொரு உள்நோக்கத்துடனும் எடுக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தொற்றுநோயின்போது நாங்கள் பொது மக்களைக் காலி முகத்திடலில் கூடுவதை ஊக்கப்படுத்தினோம். இதன் விளைவாகவே வாகன நிறுத்துமிடங்களையும் மூடிவிட்டோம். ஏனெனில் அது திறந்திருப்பது அப்பகுதியில் நெரிசலை உருவாக்கும் என்பதேயாகும் என நிஹால் தல்துவா சுட்டிக்காட்டினார்.

அந்தவகையில் காலி முகத்திடல்கிரீன்வாகனநிறுத்துமிடம் மூடப்பட்டதற்கு ஒரே காரணம் கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தலேயாகும். ஆனாலும் தற்போது குறித்த பகுதி மீண்டும் திறக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.



# ஆசியாவின் ராணி'யை விற்பது இறுதிமுடிவு எடுக்கப்படவில்லை

அண்மையில் கண்டறியப்பட்ட உலகின் மிகப்பெரிய நீல மாணிக்கக்கல்லான 'ஆசியாவின் ராணி'க்கு 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க முன்வந்துள்ள டுபாயைத் தளமாகக் கொண்ட நிறுவனத்துடன் இறுதி ஒப்பந்தம் செய்வது தொடர்பாக இலங்கை இன்னும் பேச்சு நடத்தி வருகிறது.

தற்போது டுபாயில் இருக்கும் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, 'ஆசியாவின் ராணி'யை விற்பனை செய்வது தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஆங்கில ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

மேலும் 100 அமெரிக்க டொலருக்கும் அதிகமான சலுகைக்காக அதிகாரிகளும் நீல மாணிக்கக் கல்லின் உரிமையாளரும் நிறுவனமொன்றுடன் இன்னும் கலந்துரையாடல் கட்டத்திலேயே இருக்கின்றனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

எனினும் குறித்த நீல மாணிக்கக்கல்லை இன்னும் அதிக விலைக்கு ஏலம் விடுவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இதற்கு முன்னர், பல உள்ளூர் வர்த்தகர்கள் இந்த நீல மாணிக்கக்கல்லுக்கு 10 கோடி அமெரிக்க டொலர்களை வழங்க முன்வந்துள்ளனர் என உரிமையாளர் சமில சுரங்க பன்னிலாராச்சி தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த மாணிக்கக் கல்லை, விஞ்ஞானி ஒருவர் 20 கோடி அமெரிக்க டொலர்களுக்கு மேல் மதிப்பிட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

# மனைவியை மகிழ்ச்சிப்படுத்த நகைகளை திருடியவர் கைது!

## யாழில் சம்பவம்

யாழ்ப்பாணத்தில் தனது மனைவியை மகிழ்ச்சிப்படுத்தும் நோக்கில் தங்க நகைகளை திருடிய நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை, அரியாலை பிரதேசத்தில் புதிதாக திருமணம் செய்த தனது மனைவிக்காக தங்க மாலை கொள்ளையடித்த நபர் ஒருவர் நேற்று (புதன்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியா குற்ற விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது. கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் வவுனியா, நெடுங்கேணி பிரதேச வீடு ஒன்றில் பத்திரிகை பார்த்துக் கொண்டிருந்த பெண்ணிடம் திருடர் குடிப்பதற்கு நீர் கோரியுள்ளார். நீர் வழங்கிய சந்தர்ப்பத்தில் பெண்ணின் இரண்டரை பவுண் தங்க நகையை திருடிச் சென்றுள்ளார்.

இது தொடர்பில் விசாரணை நடவடிக்கை மேற்கொண்ட வவுனியா பிரிவு குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகளால் குறித்த திருடர்கள் யாழ்ப்பாணம் பிரதேசத்தில் மறைந்திருந்த நிலையில் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் திருமணம் செய்துள்ளார். நிரந்தர வருமானம் இல்லாமையால் தனது மனைவியின் அவசியத்தை பூர்த்தி செய்வதற்காக இவ்வாறு தங்க சங்கிலியைத் திருடியுள்ளார்.

தங்கு இடமின்றி பிரதேசங்களின் பல இடங்களில் வாடனைக்கு தங்கிருந்து இந்த நபர் திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தே நபர் யாழ்ப்பாணம், கோண்டாவில் பிரதேசத்தை சேர்ந்த 30 வயதுடையவராவார். அவர் போதைப் பொருளுக்கு அடிமையானவர் எனவும் அவரை வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் எனக் குறிப்பிடப்படுகின்றது.

# அரச ஊழியர் ஓய்வுபெறும் வயதெல்லையை 65 ஆக அதிகரிக்கும் சுற்று நிருபம் இன்று!

அரச ஊழியர்கள் ஓய்வு பெறும் வயதெல்லையை 65 ஆக அதிகரிக்கும் சுற்றுநிருபம் வெளியிடப்படவுள்ளது. இன்று(வியாழக்கிழமை) குறித்த சுற்றுநிருபம் வெளியிடப்படவுள்ளதாக பொதுநிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது. 2022 வரவு செலவுத் திட்ட யோசனைக்கமைய இந்த சுற்றுநிருபம் வெளியிடப்படவுள்ளது. எவ்வாறாயினும், அரச ஊழியர்கள் ஓய்வு பெறும் வயதெல்லையை 65 ஆக அதிகரிக்கும் திட்டத்துக்குத் தாம் எதிர்ப்பு தெரிவிப்பதாக இலங்கை நிர்வாக சேவை சங்கம் இதற்கு முன்னர் தெரிவித்திருந்தது. ஓய்வுபெறும் வயது 62 ஆகக் காணப்பட வேண்டும் என பொதுநிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தினூடாக குறித்த சங்கம் இதனைத் தெரிவித்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# எரிவாயுவுக்காகக் காத்திருந்த நபரொருவர் அம்பலாங்கொடையில் மயக்கி விழுந்தார்

## பொலிஸ் நிலையத்தில் வைத்து விநியோகம்

அம்பலாங்கொடை பிரதேசத்தில் சமையல் எரிவாயுவை கொள்வனவு செய்வதற்காக மக்கள் நீண்ட வரிசையில் நின்றுள்ளனர். இதன் காரணமாக லிற்றோ சமையல் எரிவாயு கொள்கலன்களை ஏற்றி வந்த சுமை ஊர்தியை அம்பாலங்கொடை பொலிஸ் நிலையத்துக்குள் கொண்டு சென்று அங்கிருந்தவாறு எரிவாயு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

நீண்ட நேரம் வரிசையில் நின்றதன் காரணமாக ஒருவர் மயங்கி தரையில் விழுந்துள்ளார்.

இதனையடுத்து, அம்புலன்ஸ் வண்டியை வரவழைத்து பொலிஸார் அவரை வைத்திய சாலையில் சேர்த்துள்ளனர். அண்மைய காலமாக சமையல் எரிவாயுவை கொள்வனவு செய்வதற்காக மக்கள் வரிசையில் நிற்கும் இடையில் மோதலான நிலைமைகள் அதிகரித்து வருவதால், எரிவாயு விநியோகத்தின் போது பொலிஸாரின் விற்பனை யாளர்கள் பொலிஸாரின் உதவியை பெற்றுக்கொள்ள நேரிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.01.2022இல் வெளியிடப்பெற்றது.